**தமிழ்நாடு மின்கழகக் கணக்காயர் களத்தொழிலாளர் சங்கம்**

**பதிவு எண் - 2472 அங்கீகாரம் பெற்றது.**

**தலைமை இடம் - சென்னை.**

**S.நாகராஜன்** தலைவர்

**K.சந்திரசேகரன்,B.A** பொதுச்செயலாளர்

**B.தியாகராஜன், M.Com.,** நிதிச்செயலாளர்

**சுற்றறிக்கை எண் : 02/2019** நாள்: 28-02-2019

அன்புகெழுமிய சங்க உடன் பிறப்புகளுக்கு பொதுச்செயலாளரின் வணக்கங்களும் வாழ்த்துக்களும். 31-01-2019 நாளிட்ட சுற்றறிக்கை எண் 1ன் தொடர்ச்சியாக இந்த சுற்றறிக்கை வாயிலாக கீழ்கண்ட விபரங்களை உங்களோடு பகிர்ந்து கொள்கின்றேன்.

**இயக்க நடவடிக்கைகள்:**

நீண்ட காலமாக சங்கப் பொறுப்பாளர்கள் தேர்தல்களை நடத்திடாத காரணத்தினால் திருநெல்வேலி மின் உற்பத்தி மற்றும் தூத்துக்குடி மின் உற்பத்தி வட்டங்களில் சங்க நடவடிக்கைகள் முடங்கி உறுப்பினர்கள் பாதிப்புக்குள்ளாகி வருவதை கருத்தில் கொண்டு துணைக்குழு உறுப்பினர் திரு.T.தேசியப்பன், நெல்லை மண்டலச்செயலாளர் திரு.S.அய்யம்பெருமாள் ஆகியோரின் பரிந்துரைகள் படி திருநெல்வேலி மின்உற்பத்தி வட்டத்திற்கு திரு.L.சுரேஷ் அவர்களையும் தூத்துக்குடி அனல்மின் உற்பத்தி வட்டத்திற்கு திரு.U.S.மனோஜ்குமார் அவர்களையும் வட்ட அமைப்பாளர்களாக நியமித்துள்ளோம்.

மார்ச் திங்கள் முதல்வாரத்தில் திருவாரூர், நாகப்பட்டினம் வட்டங்களில் மத்திய சங்கப் பொறுப்பாளர்கள் சுற்றுப்பயணம் மேற்கொண்டு உறுப்பினர்களையும், பொறுப்பாளர்களையும் சந்திக்க திட்டமிடப்பட்டுள்ளது.

ஏறத்தாழ கால்நூற்றாண்டிற்கும் மேல் சங்கத்தைக் கட்டிக்காத்த மதுரைவீரன் எனப் பலராலும் போற்றப்பட்ட இணைச்செயலாளர் திரு.S.மகாலிங்கம் அவர்களும், அரைநூற்றாண்டிற்கும் மேலாக ஈரோடு மின்உற்பத்தி வட்டத்தில் சங்கத்திற்கு தலைமையேற்று அயராது உழைத்திட்ட திரு.நரசிம்மன் அவர்களும் முறையே 07-02-2019, 14-02-2019 ஆகிய நாட்களில் இயற்கை எய்திய துயரச்செய்தியை உங்களோடு பகிர்ந்து கொள்கின்றோம். அவர்கள் இருவருடைய இறுதிச் சடங்கில் பொறுப்பாளர்களும், உறுப்பினர்களும் கலந்து கொண்டு அவர்களுக்கு மரியாதை செலுத்தினர்.

கடந்த 23-2-2019 அன்று மதுரையில் நடைபெற்ற நினைவேந்தல் மற்றும் படத்திறப்பு நிகழ்வுகளில் சங்கத்தலைவர், துணைத்தலைவர்கள், பொதுச்செயலாளர், அமைப்புச்செயலாளர், நிதிச்செயலாளர், நெல்லை மண்டலச்செயலாளர், கோவை உதவி மண்டலச்செயலாளர் மற்றும் மதுரை நெல்லை மண்டலத்தைச் சார்ந்த பொறுப்பாளர்களும், உறுப்பினர்களும் கலந்து கொண்டனர். அதுசமயம் மதுரை வாரிய வளாகத்தில் உள்ள சங்க அலுவலகத்தில் முன்னாள் பொதுச்செயலாளர் பெரியவர் ச.வெ.அங்கப்பன் மற்றும் மறைந்த இணைச்செயலாளர் அமரர் S.மகாலிங்கம் ஆகிய இருவரின் படங்களும் திறந்து வைக்கப்பட்டு அவர்களுக்கு அஞ்சலி செலுத்தப்பட்டது.

சங்கத்தின் உயர்மட்டக்குழுக் கூட்டம் கடந்த 17-2-2019 அன்று நடைபெற்றது. நடைபெற்ற கூட்டத்தில் உறுப்பினர் சந்தா வசூல், செய்திமடல் சந்தாவசூல், சங்கத்தின் செய்தி தொடர்புகள், சங்கத்தின் வலிமையை மேம்படுத்திட அமைக்கப்பட்ட துணைக்குழுக்களின் நடவடிக்கைகள், தீர்வு காணப்படவேண்டிய பிரச்சனைகளில் தீர்வுகாண எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் ஆகியவை ஆய்வு செய்யப்பட்டு இவைகளில் தொடர்ந்து மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் குறித்து முடிவுகள் எடுக்கப்பட்டது. தமிழக அரசு 01-04-2003க்குப் பின் பணியில் சேர்ந்தவர்கட்கு பழைய ஓய்வூதிய திட்டத்தை அமுல்படுத்துவது சாத்தியமில்லை என்று அறிவித்து விட்டநிலையில் குறைந்த பட்சம் 01-04-2003க்கு முன்பு ஒப்பந்த தொழிலாளியாக

வாரியத்தில் பணிபுரிந்து அதன் பின் நிரந்தரப்படுத்தப்பட்டவர்களுக்கு பழைய ஓய்வூதிய திட்டத்தை அமுல்படுத்திட சட்டபூர்வமாக மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் குறித்து விவாதித்து கீழ்கண்ட முடிவுகள் எடுக்கப்பட்டது.

1. சம்மந்தப்பட்ட மேற்பார்வைப்பொறியாளருக்கு பதிவு அஞ்சல் மூலம் விண்ணப்பங்கள் சமர்ப்பிப்பது.
2. வழக்கு நிதியாக முதல் தவணையாக ரூ.1000 வசூல்செய்வது.
3. முதற்கட்டமாக 01-04-2003க்கு முன் ஒப்பந்த தொழிலாளர்களாக பணிபுரிந்து நிரந்தரப்படுத்தப்பட்டு ஓய்வு பெற்றவர்கள் சார்பில் வழக்கு தொடுப்பது.
4. வழக்கினை தென்மாவட்ட தொழிலாளர்கள் சார்பில் மதுரை உயர்நீதி மன்றத்தில் திரு.S.அய்யம்பெருமாள் நெல்லை மண்டலச்செயலாளர் அவர்களும் ஏனைய வட்ட தொழிலாளர்கள் சார்பில் திரு.B.கோபாலகிருஷ்ணன் அமைப்புச்செயலாளர் அவர்களும் சென்னை உயர்நீதிமன்றத்தில் நடத்திட ஏற்பாடு செய்வது.
5. சங்கத்தின் செய்தி தொடர்புகளை மேலும் மேம்படுத்திட இதுவரை சங்கத்தின் வாட்ஸ்அப் குருப்பில் இணையாத பொறுப்பாளர்களை குழுவில் இணைப்பது.
6. சங்க நடவடிக்கைகளில் மகளிரின் பங்கை மேம்படுத்திட மாநில மகளிர்அணி செயலாளர் அவர்கள் தலைமையில் வட்ட மகளிர் அணிசெயலாளர்கள் கூட்டம் ஒன்றினை கூட்டி திட்டமிடுவது. முதல்கட்ட நடவடிக்கையாக எதிர்வரும் 08-03-2019 அன்று அனைத்து பகுதிகளிலும் மகளிர் நாளை சிறப்பாக கொண்டாடிட நடவடிக்கை எடுப்பது.
7. செய்திமடலில் மண்டலத்திற்கு ஒரு பக்கம் என்ற விகிதத்தில் விளம்பரங்களை பெற்று அனுப்புவது.

உயர்மட்டக் குழுவில் எடுக்கப்பட்ட மேற்கண்ட முடிவுகளை செயல்படுத்திட உரிய நடவடிக்கைகளை மேற்கொண்டிட அனைத்து பொறுப்பாளர்களையும் வேண்டுகின்றோம்.

மற்றபடி உடுமலை வட்டத்திலிருந்து 2019ம் ஆண்டிற்கு 170 உறுப்பினர்களிடமிருந்து சந்தா வசூல் செய்து மத்திய சங்கத்திற்கு பங்குத்தொகை அனுப்பப்பட்டுள்ளது. இப்பணியில் ஈடுபட்ட வட்டச்செயலாளர் திரு.G.பொன்ராஜ் அவர்களுக்கும் அவருக்கு உறுதுணையாக பணியாற்றிய பொறுப்பாளர்களையும் பாராட்டுகிறோம்.

**நமது கோரிக்கைகள்:**

1. பாராளுமன்ற தேர்தல்களுக்கான அறிவிப்பு விரைவில் வெளியிட உள்ளதையும் அறிவிப்புகள் வெளியிடப்பட்டு தேர்தல் நன்னடைத்தை விதிகள் அமுலுக்கு வருவதற்கு முன் தகுதி காண் அறிக்கை பெறப்பட்டுள்ள அனைத்து பொறுப்புகளுக்கும் பதவி உயர்வு உத்திரவுகளை வழங்கிடவும், விருப்ப ஊர்மாறுதல் உத்திரவுகள், வாரிசு வேலை வாய்ப்பு நியமனங்கள் உள்ளிட்ட ஊழியர்கள் தொடர்பான ஏனைய உத்திரவுகளை வழங்கிடவும் 19-02-2019 தேதியிட்ட கடிதஎண்: 41/2019 வாயிலாக வாரியத்தலைவரை வேண்டியுள்ளோம். வட்ட அளவில் இத்தகைய கோரிக்கையினை மேற்பார்வை பொறியாளர்களுக்கு முன்வைத்திட வட்டப்பொறுப்பாளர்களை வேண்டுகின்றோம்.

கடந்த சிலமாதங்களாக வாரிய ஊழியர்களுக்கு மாதாந்திர ஊதியத்தை தவிர வைப்புநிதி முன்பணம், பயணப்படி, சரண்விடுப்பு போன்றவைகளை வழங்கிட தேவையான நிதியினை வாரியம் ஒதுக்கீடு செய்யாததை சுட்டிக்காட்டி இக்குறையை களைத்திட 20-02-2019 தேதிய கடித எண்: 42/2019 வாயிலாக இயக்குனர் நிதி அவர்களை வேண்டியுள்ளோம்.

**வாரிய ஆணைகள் மற்றும் பதவி உயர்வு செய்திகள்:**

1. வருவாயப்பிரிவுகளுக்கு மின்இணைப்புகள் எண்ணிக்கையை வரையறுத்திட உரிய பரிந்துரைகளை வழங்கிட குழு ஒன்றினை நியமித்து 04-02-2019 தேதியிட்ட வாரிய ஆணைஎண் 15 வாயிலாக உத்திரவு வழங்கப்பட்டுள்ளது.

2. உதவி கணக்கு அலுவலர் பொறுப்பிலிருந்து மேலும் 9 நபர்களுக்கு கணக்கு அலுவலர் பதவி உயர்வு வழங்கப்பட்டுள்ளது. பதவி உயர்வு பெற்றுள்ள கடைசி நபர் திரு.T.சக்திவேல், உடுமலை வட்டம்.
3. மேலும் 22 நபர்களுக்கு உதவி கணக்கு அலுவலர் பதவி உயர்வு வழங்கப்பட்டுள்ளது. பதவி உயர்வு பெற்ற கடைசிநபர் திருமதி.S.சாந்தி, மதுரை வட்டம்.
4. உதவி நிர்வாக அலுவலர் பொறுப்பிற்கு பதவி உயர்வு வழங்கிட வாரிய ஆணை எண்:04 நாள் 21-02-2019 வாயிலாக 58 நபர்களுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. பட்டியலில் இடம்பெறும் கடைசி நபர் திருமதி.K.விஜயலட்சுமி, விருதுநகர் வட்டம். மேற்கண்ட பட்டியலிலிருந்து திரு.S.அருளானந்தம், திருச்சி பெருநகர் வட்டம் வரிசை எண்:30 வரை பதவி உயர்வு வழங்கப்பட்டுள்ளது.
5. மேலும் 22 நபர்களுக்கு மதிப்பீட்டு அலுவலர் பொறுப்பிற்கு பதவி உயர்வு உத்திரவு வழங்கப்பட்டுள்ளது. பதவி உயர்வு பெற்றுள்ள கடைசிநபர் திருமதி.A.சேவியர்மேரி, சிவகங்கை வட்டம்.
6. நிர்வாக உதவியாளர் பொறுப்பிலிருந்து நிர்வாக மேலாளர் பொறுப்பிற்கும், இளநிலை உதவியாளர்/தட்டச்சர் பொறுப்பிலிருந்து கணக்கு உதவியாளர் பொறுப்பிற்கும் பதவி உயர்வுகள் வழங்கிட பட்டியல்களுக்கு அனுமதி அளிக்கப்பட்டு ஓரிரு நாட்களில் பதவி உயர்வுகள் வழங்கப்பட்டுவிடும் என நம்புகிறோம்.
7. இளநிலைப்பொறியாளர் IIம் நிலையிலிருந்து முதல் நிலை பொறுப்பிற்கு பதவி உயர்வு வழங்குவது அந்தப் பொறுப்பிற்கு முதன்மை நிர்ணயம் செய்வது தொடர்பான வழக்கு நிலுவையில் உள்ளதால் தடைபட்டுள்ளது.

**இதர செய்திகள்:**

1. 23-02-2019 அன்று சென்னையில் நடைபெற்ற தமிழ்நாடு மின்சாரத்தொழிலாளர் சம்மேளனத்தின் மாநில மாநாட்டில் நமது சங்கத்தின் சார்பில் உதவிப்பொதுச்செயலாளர் கலந்து கொண்டு வாழ்த்துரை ஆற்றினார்.
2. 28-02-2019 அன்று சென்னையில் நடைபெற்ற மின்வாரிய ஓய்வூதியர் சங்கங்களின் சம்மேளனத்தின் 5வது மாநில மாநாட்டில் நானும், உதவிப்பொதுச்செயலாளரும் கலந்துகொண்டோம். நான் வாழ்த்துரை வழங்கினேன்.

மற்றபடி வாரியத்தில் பதவி உயர்வு ஒதுக்கீடு, மறு ஒதுக்கீடு, விருப்ப ஊர்மாறுதல் ஆகியவைகள் ஏற்கனவே நடைமுறைபடுத்தப்பட்ட வழிகாட்டுதல்கள் படி ஏறத்தாழ 95% முறைபடி வழங்கப்பட்டு வருகிறது. இருப்பினும் 5% உத்திரவுகள் வாடிக்கையான நடைமுறைகளுக்கு புறம்பாக வழங்கப்பட்டு வருகிறது. அதனை தடுத்திட தேவையான நடவடிக்கைகளை மேற்கொண்டிட கொள்கைகளுக்கு புறம்பாக வழங்கப்படும் அத்தகைய உத்திரவுகள் குறித்து முழுமையான விபரங்களை மத்திய சங்கத்திற்கு அவ்வப்போது அனுப்பிவைத்திட பொறுப்பாளர்களை வேண்டுகின்றோம்.

வாழ்த்துக்கள்

தோழமையுள்ள

பொதுச்செயலாளர்

பெறுநர்: மத்திய அலுவலக கிளைச்செயலாளர்கள், உதவிகோட்டச் செயலாளர்கள், கோட்டச்செயலாளர்கள், வட்ட மகளிர் அணிச்செயலளார்கள், வட்டச்செயலாளர்கள், வட்டத்தலைவர்கள், உதவி மண்டலச்செயலாளர்கள், மண்டலச்செயலாளர்கள், மற்றும் மத்திய சங்கப் பொறுப்பாளர்கள்.

**தமிழ்நாடு மின்கழகக் கணக்காயர் களத்தொழிலாளர் சங்கம்**

**Tamilnadu Electricity Board Accounts And Executive Staff Union**

(Regd.No.)HQ:No.29,Meeran Sahip Street, Annasalai, Chennai – 600 002. (Recognised)

(Affiliated With Public Service International)

**S.Nagarajan,** **President**

**K.Chandrasekaran,B.A.,** **General Secretary**

**B.Thyagarajan,M.Com.,MBA.,PGDCA.,** **Finance Secretary**


திருமதி.C.சுகந்தி,
மாநில மகளிர்அணிச்செயலாளர்

நாள்: 22-02-2019
இடம்: குறிஞ்சிப்பாடி

அன்பிற்கும், பெருமதிப்பிற்கும் உரிய சகோதரிகளே இதயம் கனிந்த வணக்கம். பெண்கள் அடிமைகளாகவும், ஆண்களுக்கு சமமான உரிமைகள் இல்லாமலும் சமவேலைக்கு சமஊதியம், ஓட்டுரிமை போன்ற உரிமைகள் இல்லாமலும் 18-ஆம் நூற்றாண்டு வரை துன்பங்களை அனுபவித்து வந்தோம். அந்த உரிமைகளுக்காக போராடி உரிமைகளை பெற்ற நாள்தான் மார்ச் திங்கள் 8-ஆம் நாளாகும். அந்த சிறப்பு வாய்ந்த நாளை ஐக்கிய நாடுகள் சபையும் அங்கீகரித்து தீர்மானம் நிறைவேற்றியது.

எனவே, வருகின்ற 08-03-2019 அன்று உலக மகளிர் தினத்தை சிறப்பாக மாவட்டம் தோறும் கொண்டாடிட நமது வட்ட மகளிர் அணி செயலாளர்களை அன்போடு கேட்டுக்கொள்கின்றேன். மேலும், அதன் புகைப்படங்களையும் மற்றும் நிகழ்ச்சிக் குறிப்புகளையும் நமது மதிப்பிற்குரிய பொதுச்செயலாளர் அவர்களுக்கு அனுப்பிவைத்திட வேண்டுகின்றேன்.

நன்றி, வணக்கம்.

தங்கள் உண்மையுள்ள

(சுகந்தி)
மாநில மகளிரணி செயலாளர்,
சென்னை, குறிஞ்சிப்பாடி.

பெறுதல் : வட்ட மகளிர்அணி செயலாளர்கள்

நகல் :
1. அமைப்புச்செயலாளர் - சங்ககிரி.
2. தலைவர் - கோவை.
3. பொதுச்செயலாளர் - சென்னை.